அஷ்டலக்ஷ்மி

# சிறுவர் கதை மலர்

2



கல்வி உலகு

# 1. இரண்டு ஆடுகள்




ஒரு ஓடையைக் கடக்க மரப்பாலம் ஒன்று இருந்தது. ஒரு நாள் இரண்டு ஆடுகள் அப்பாலத்தின் நடுவில் சந்தித்தன. பாலம் மிகக் குறுகலாக இருந்ததால் அவை ஒன்றை ஒன்று கடந்து செல்ல முடியாமல் எதிர்த்து நின்றன.


வெள்ளை நிற ஆடு மற்ற கறுப்பு நிற ஆட்டைப் பார்த்து "நீ நகர்ந்து பின்னே செல். நான் பாலத்தைக் கடந்து அப்பால் சென்றபின், நீ செல்லலாம்" என்றது. இது கேட்ட கறுப்பு ஆடு, "நான் தான் முதலில் இங்கு வந்தேன். அதனால் நீதான் பின்னே சென்று எனக்கு வழி விட வேண்டும்" என்றது.

இரண்டு ஆடுகளும் வெகுநேரம் வாதாடி முடிவில் சண்டையில் இறங்கின. இரண்டும் மோதிக்கொண்டு சண்டையிட்டன. அதனால் நிற்கமுடியாமல் கீழே நீரில் விழுந்தன. அந்நீரால் அவை அடித்துச் செல்லப்பட்டன.



கல்வி உலகு

சில நாட்களுக்குப் பிறகு அதே இடத்தில் வேறு இரண்டு ஆடுகள் சந்தித்தன. அவை ஒன்றுக் கொன்று எதிர்த்துச் சண்டையிடவில்லை. இரண்டும் தமக்குள் பேசிச் சுலபமாகப் பாலத்தைக் கடக்க முடிவு செய்தன.

சிறிய ஆடு தனது கால்களை மடக்கிக் கொண்டு படுத்துக் கொண்டது. பெரிய ஆடு அதன் மேல் தாவிக் குதித்து, தாண்டிச் சென்று பாலத்தைக் கடந்தது. பிறகு சிறிய ஆடு எழுந்து நின்று தன் வழியே நடந்து சென்றது.



# உ. சிங்கமும் சுண்டெலியும்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. ஒரு நாள் அது இரைதேடி அலைந்து திரிந்தது. இரை உண்டு களைப்புடன் குகைக்குத் திரும்பிற்று. அசதியால் அயர்ந்து உறங்கிற்று.

அப்போது அங்கு வந்த சுண்டெலி ஒன்று தாவிக் குதித்து விளையாடி சிங்கத்தின் மேல் விழுந்தது. உறக்கம் கலைந்த சிங்கம் சுண்டெலியைக் கண்டது. தன் காலால் அதை அழுத்திப் பிடித்தது. சுண்டெலியும் “கிரீச்” சென்று அலறியது.

சிங்கம் சுண்டெலியைப் பார்த்து “ஏய் சின்னப்பயலே! நீ ஏன் என் உறக்கத்தைக் கலைத்தாய்? உன்னை நசுக்கிக் கொல்கிறேன்” என்றது. பயங்கொண்ட சுண்டெலி நடுங்கிக் கொண்டே “ஐயா! அறியாமையால் இங்கு வந்து தங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன்.

என்னை மன்னித்து விடுங்கள் தங்கள் உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன்”. என்றது. நேரம் வரும் போது தங்களுக்கு உதவுவேன் சிங்கராஜா என்று சுண்டெலி கூறியது.



கல்வி உலகு

இது கேட்டு சிங்கம் நகைத்துக் கொண்டே, “ஏய் சின்னப்பயலே! நீ எனக்கு எவ்வழியில் உதவ முடியும்?” என்று அலட்சியமாக கூறிச் சுண்டெலியை விட்டு விட்டது. சுண்டெலியும் தாவிக் குதித்து ஓடி மறைந்தது.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் தன்னையும் அறியாமல் அச்சிங்கம் வேடன் ஒருவனது வலையில் சிக்கிக் கொண்டது. பல வழிகளில் முயன்றும் அதனால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. வருத்தத்துடன் பலமாகக் கர்ஜித்தது.

தற்செயலாய் சிங்கத்தின் அலறலைக் கேட்ட சுண்டெலி, சிங்கம் இருக்கும் இடம் நோக்கி ஓடி வந்தது. சிங்கத்தின் பரிதாப நிலையைக் கண்டது. தனது கூரிய பற்களால் வலையைப் பல இடங்களில் கடித்துத் துண்டாக்கியது. அதனால் சிங்கமும் வலையிலிருந்து தப்பி வெளியே வந்தது.


மகிழ்ச்சியுடன் சுண்டெலியைப் பார்த்து நன்றி கூறிவிட்டுச் சென்றது சிங்கம்






கல்வி உலகு

# 3. நாணலும் நாவலும்



ஓர் ஆற்றங்கரையோரம் பெரிய நாவல் மரம் ஒன்று இருந்தது. அதன் அருகில் கீழே சில நாணல்களும் முளைத்திருந்தன.


ஒரு நாள் தென்றல் காற்று வீசியது. அக்காற்றில் நாணல்கள் ஆடி வளைந்து, பிறகு நிமிர்ந்து நின்றன. அது கண்ட நாவல் மரம் நாணலைப் பார்த்து, "இலேசான தென்றல் காற்றிற்கே நீ இவ்வளவு வளைகிறாயே! பெரிய புயற் காற்றில் நீ என்ன செய்வாய்? என்னைப் பார். நான் பெரிய சூறாவளிக் காற்றிலும் வளையாமல் நிமிர்ந்து நிற்பேன் என்று ஆணவத்துடன் கூறியது.

நாணலும் வருத்தத்துடன் பேசாமல் இருந்தது.

சில நாட்கள் கழித்து ஓர் இரவு அங்கு பெரிய புயல் காற்று வீசிற்று. நாணல் பலமாக பல முறை ஆடி வளைந்து புயல் ஓய்ந்ததும் நேராக நிமிர்ந்து நின்றது.

ஆனால் நாவல் மரமோ காற்றின் வேகத்தால் கீழே வீழ்த்தப்பட்டது. அது மறுபடியும் நிமிர்ந்து நிற்க முடியாமல் தரையில் கிடந்தது.

மறுநாட் காலை நாணல் நாவல் மரத்தைப் பார்த்து, நண்பரே! தாங்கள் வளைந்து கொடுக்கப் பழகாததால் புயலில் வீழ்ந்தீர். நானோ, பலமுறை வளைந்து, கீழே விழாமல் நிமிர்ந்து நிற்கிறேன்" என்றது.



# 4. நாயின் நல்லறிவு



ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் ஒரு பெரிய மாளிகையில் வசித்து வந்தார். அவரிடம் நிறையப் பணம் இருந்தது.

அவர் பெரிய நாய் ஒன்று வளர்த்து வந்தார். அதற்கு நிறைய நல்ல உணவு கொடுத்து அன்போடு வளர்த்து வந்தார். அதனால் அது நல்ல வலுவோடு பெரியதாய் வளர்ந்திருந்தது. அதுவும் அவரிடம் மிக்க நன்றியுடன் இருந்தது.

ஓர் இரவு தனவந்தர், தனது மாடி படுக்கை அறையில் உறங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் சில கள்வர்கள் அவரது மாளிகையினுள் புகுந்தனர். அவர்களைக் கண்டதும் நாய் பலமாகக் குரைத்தது. நாயின் குரைத்தலைக் கேட்ட தனவந்தர் திடீரென்று விழித்தெழுந்தார். கீழே இறங்கி வந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தார்.

இதற்குள் நாயின் குரலைக் கேட்ட கள்வர்கள் ஓடி தோட்டத்திற்குள் மறைந்து கொண்டனர். ஒன்றும் காணாமல் நாய் மேல் கோபம் கொண்ட தனவந்தர், ஒரு தடியால் நாயை அடித்தார். பிறகு மறுபடி உறங்கத் தன் மாடியறைக்குச் சென்றார் நாயும் வருத்தத்துடன் பேசாமல் இருந்தது.

சிறிது நேரம் கழித்து, ஓசை அடங்கியவுடன் அத்திருடர்கள் மறுபடியும் மாளிகையினுள் புகுந்தனர். நாய் அவர்களைப் பார்த்து சப்தம் செய்யாமல் கவனித்தது.

வீட்டிள்குள் புகுந்த திருடர்கள் இரும்புப் பெட்டியின் பூட்டை உடைத்து அதிலிருந்த எல்லா நகைகளையும் வெளியில் எடுத்து, துணியில் மூட்டையாகக் கட்டினர். அம்மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்து புறப்பட்டுச் சென்றனர். அவை எல்லாவற்யையும் நாய் கவனித்ததுடன் அவர்களை அறியாமல், அவர்களது பின்னால் சென்றது.

சிறிது தூரம் சென்றதும் கள்வர்கள் ஒரு தோட்டத்தில் புகுந்தனர். அங்கு ஒரு பெரிய மரத்தடியில் மண்ணைத் தோண்டி குழி பறித்தனர். அக்குழியில் நகை மூட்டையை வைத்து மண்ணால் குழியை மூடினர். பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். நடந்தவை எல்லாவற்றையும் சிறிது தூரத்தில் நாய் மறைந்து இருந்து கொண்டு கவனித்தது. பிறகு வீட்டிற்கு திரும்பச் சென்றது.

காலையில் விழித்தெழுந்த தனவந்தர் இரும்புப் பெட்டி திறந்து கிடப்பதையும், அதிலிருந்த நகைகள் எல்லாம் களவாடப் பட்டிருப்பதையும் கண்டார். தனது தவறை உணர்ந்தார். அவசரப் புத்தியால் நாயை அடித்ததற்கு தன்னைத் தேனே மிகவும் வருந்திக் கொண்டார்.





ஆனால் அந்த நாய் சும்மா இராமல் அவரிடம் ஓடிவந்து, அவரது ஆடையைக் கவ்வி இழுத்தது. ஒன்றும் புரியாமல் அவர் திகைத்தார். சிறிது நேரம் யோசித்த பிறகு அந்நாயுடன் கூட நடந்து சென்றார்.

நாய் அவரைத் திருடர்கள் நகைகளைப் புதைத்து வைத்திருக்கும் மரத்தினடிக்கு அழைத்துச் சென்றது. தன் முன் கால்களால் அங்கு பலமுறை கீறியது. உடனே அவர் நாய் கீறின இடத்தில் மண்ணைத் தோண்டி எடுத்தார். குழியில் மூட்டையைக் கண்டு அதை வெளியில் எடுத்தார். மூட்டையை அவிழ்த்துப் பார்த்ததில் களவு போன அவரது நகைகள் எல்லாம் இருந்தன. அதைக் கண்டு அவர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்.

நகை மூட்டையை எடுத்துக் கொண்டு நாயுடன் தனது மாளிகைக்கு திரும்பினார். தனது மனைவியிடம் நகை மூட்டையைக் கொடுத்து விவரம் முழுதும் கூறினார். நாயின் புத்திக் கூர்மையைக் கண்டு இருவரும் வியந்தனர். அன்று முதல் அந்நாயை மேலும் அன்புடன் சீராட்டி வளர்த்தனர். நாயும் அவர்களிடம் மிக்க நன்றியுடன் நடந்து வந்தது.

# 5. புத்தியுள்ள சேவல்




ஒரு கிராமத்தில், வசதியுள்ள குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நிறைய நிலபுலன்கள் இருந்தன. அவனிடம் நிறைய ஆடு, மாடு, கோழி முதலியவைகளும் இருந்தன. அவனிடம் பெரிய சேவல் ஒன்று இருந்தது. அது பெரிய கொண்டையுடன் அழகாக இருந்தது. அதனால் அதைக் குடியானவன் அன்போடு காப்பாற்றி வந்தான். அங்குள்ள இதர மக்களும், அச்சேவலின் பால் அன்புடன் இருந்தனர். அது, தினசரி அதிகாலையில் உரக்கக் கூவும். அதனால் அங்குள்ள மக்கள் அதிகாலையில் விழித்தெழுந்து தம் தம் வேலைக்குச் சென்றனர். இவ்வழியில் அச்சேவல் எல்லோருக்கும் மிக்க உதவியாய் இருந்தது.

குடியானவன் வீட்டிற்கு அருகாமையில் புதரில், ஒரு பெரிய நரி வசித்து வந்தது. அது எப்படியேனும் அச்சேவலைக் கொன்று தின்ன நினைத்தது. பலமுறை முயன்றும் முடியவில்லை. சேவல் தனது சாமர்த்தியத்தால் நரியிடமிருந்து தப்பி வந்தது.

ஒரு நாட் காலை அச்சேவல் ஒரு பெரிய மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்தது. குடியானவன் வயலுக்குச் சென்றிருந்தான். தற்செயலாய் அப்பக்கம் வந்த நரி மரத்திலிருந்த சேவலைப் பார்த்து, ''நண்பரே! ஒரு நற்செய்தி.

இன்று முதல் பறவைகளும் மிருகங்களும் ஒன்று கூடி நண்பர்களாக வாழ நிச்சயித்து விட்டன. அதனால் தாங்கள் தைரியமாகக் கீழிறங்கி வந்து என்னுடன் பழகலாம்" என்றது.

நரியின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட சேவல், "நரியாரே! உண்மையாகவே தாங்கள் கூறுவது ஒரு பெரிய நற்செய்தி தான். இனி நாம் இருவரும் ஒன்று கூடிப் பயமின்றிப் பழகலாம். நானும் கீழே இறங்கி வருகிறேன்" என்று கூறியது. இது கேட்ட நரி ஆவலுடன் வெகு நேரம் மரத்தினடியில் காத்திருந்தது. ஆனால் சேவல் மரத்திலிருந்து கீழிறங்கி வராமல் வேறுபக்கம் பார்த்துக் கொண்டிருந்தது.


இதனால் நரி சேவலைப் பார்த்து, "என்ன நரி கீழே இறங்கி வர தயங்குகிறீர்கள்? அங்கு என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்குச் சேவல் அதோ! தொலைவில் சில வேட்டை நாய்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளும் இங்கு வந்ததும், நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து விளையாடலாம்" என்றது.

இது கேட்ட நரி உடனே பயந்து அங்கிருந்து ஓட்டமெடுத்தது. இது கண்ட சேவல் நரியைப் பார்த்து, உரக்க "ஏன் பயந்து ஓடுகிறீர்கள்? நமது நண்பர்கள் தானே வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூறி நகைத்தது. ஆனால் நரி திரும்பிப் பாராமல் வேகமாய் ஓடி மறைந்தது.

ஆனால் நரி தனது எண்ணத்தை மாற்றவில்லை. எவ்வகையேனும் அச்சேவலைக் கொன்று தின்ன நினைத்தது.

சில நாட்கள் கழித்து ஒரு நாட் காலை சேவல் வெளியில் அலைந்து கொண்டிருந்தது. அச்சமயம் நரி ஒரு பெரிய மரத்தின் பின்னால் ஒளிந்திருந்தது. சேவல் அம்மரத்தின் அருகில் வந்ததும், திடீரென்று சேவலின் மேல் தாவி வாயில் கவ்வி எடுத்து, ஓடியது. சேவலும் பலமாகக் கூவியது.

சேவலின் குரல் கேட்ட குடியானவன், ஓடும் நரியையும், அதன் வாயில் தனது சேவலையும் கண்டான். உடனே கையில் தடி எடுத்து தனது வேலையாட்களுடன், நரியைத் துரத்தி விட்டான். நரி வேகமாய் ஓடி வெகுதூரம் சென்று விட்டது.




குடியானவன் இனி தன்னை நரியிடமிருந்து மீட்க முடியாது என்றறிந்த சேவல், நரியிடமிருந்து மெல்ல, "ஏன்? இந்தக் குடியானவன் வீணே ஓடி வருகிறான்? எனக்கு அவன்மீது சிலநாட்களாய் வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

அதனால் அவனிடம் இருக்க எனக்கு விருப்பம் இல்லை. இப்பொழுது நான் தங்களுடைய சேவல். இதைத் தாங்கள் அக்குடியானவனிடம் கூறி விடுங்கள்" என்றது.


சேவலின் வார்த்தைகளை கேட்ட நரி ஆனந்தங்கொண்டு தன்னை மறந்து, குடியானவனிடம் சேவல் இனி தன்னுடையது என்று கூற வாயைத் திறந்தது. வாயில் கவ்வியிருந்த சேவல் கீழே விழுந்தது. உடனே அச்சேவல் பறந்து சென்று அருகிலுள்ள ஒரு மரத்தின் கிளையின் மேல் உட்கார்ந்தது. அதனால் நரியிடமிருந்து தப்பியது.

தனது அறிவின்மையை எண்ணி நரி வருந்தியது. அருகில் குடியானவன் ஓடிவருவதைக் கண்டதும் பயந்து, தப்பிப் பிழைக்க அங்கிருந்து வேகமாய் ஓடிச் சென்றது.

குடியானவனைக் கண்டதும் சேவல் மரத்திலிருந்து கீழிறங்கி வந்தது. குடியானவனும் சேவலை அன்புடன் எடுத்துத் தன் வீட்டிற்குத் திரும்பினான்.



# 6. அறிவில்லாத ஆமை




ஒரு பெரிய ஏரியில் இரண்டு பெரிய கொக்குகள் வசித்து வந்தன. அவ்வேரியில் நிறைய மீன்கள் இருந்தன. அதனால் அக்கொக்குகளுக்கு குறைவின்றி உணவு கிடைத்தது. அவைகள் அங்கு நிம்மதியாய் வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் அவ்வேரிக் கரைக்கு பெரிய ஆமை ஒன்று வந்தது. அதுவும் அங்கு வசிக்க ஆரம்பித்தது. அதனால் ஆமையும் கொக்குகளும் நண்பர்களாயின. அவை ஒன்றுக்கொன்று உதவி புரிந்து அங்கு வாழ்ந்து வந்தன.

ஒரு நாட் காலை அவ்வேரிக் கரைக்கு இரு மீனவர்கள் வந்தனர். அவ்வேரியில் நிறையப் பெரிய மீன்கள் இருப்பதைக் கண்டனர். அவற்றைப் பிடித்து விற்று, அதிக பணம் சம்பாதிக்க நினைத்தனர். மறுநாள் பெரிய வலையுடன் அங்கு வந்து மீன்களைப் பிடிப்பதென்று தமக்குள் பேசித் தீர்மானித்தனர்.

பிறகு அங்கு இருந்து சென்றனர். அச்சமயம் அங்கு ஆமை தனியே இருந்தது. இரு கொக்குகளும் வெளியே பறந்து சென்றன. மீனவர்களது பேச்சைக் கேட்ட ஆமை திகிலுற்றது.

மாலையில் கொக்குகள் ஏரிக்கு திரும்பின. ஆமை, கொக்குகளிடம் மீனவர்களின் திட்டத்தைப் பற்றிக் கூறியது. மேலும் கொக்குகளைப் பார்த்து ஆமை, "நாளை மீனவர்கள் இங்கு வந்து மீன்களைப் பிடிக்க பெரிய வலை வீசுவர். பறவைகளாகிய நீங்கள் பறந்து வேறிடம் செல்ல முடியும். ஆனால் நான் எங்கு செல்வேன்? மீனவர்களின் வலையில் அகப்பட்டு மடியவேண்டியதுதான்" என்று வருத்தத்துடன் கூறியது.

கொக்குகள் ஆமையின் பேச்சைக் கவனமாகக் கேட்டு வருத்தமுற்றன. சிறிது யோசித்த பின்னர் ஆமையைக் காப்பாற்றுவதாக வாக்களித்தன. ஆமையிடம், "உன் வாயைத் திறக்காமல் எங்களுடன் வரமுடியுமானால் நீ தப்பிப் பிழைக்கலாம்" என்றது. அதற்கு ஆமையும் சம்மதித்தது.

உடனே ஒரு கொக்கு அருகிலிருந்த புதருக்குச் சென்று ஒரு நீண்ட தடிக்குச்சியைக் கவ்வி வந்தது. அவை இரண்டும் அக்குச்சியின் இரு முனைகளையும் கவ்விக் கொண்டன. அக்குச்சியின் நடுவில் ஆமையைத் தன்வாயால் இறுகக் கவ்வச் செய்தன. பிறகு குச்சியின் நடுவில் ஆமையுடன் அவ்விரண்டு கொக்குகளும் பறந்து மேலே சென்றன. வெகு தூரம் பறந்து சென்றன.


ஓரிடத்தில் ஒரு கிராமத்திலுள்ள சிறுவர்கள் ஆமையுடன் கொக்குகள் பறந்து செல்வதைக் கண்டு ஆச்சரியமுற்றனர். குதித்து கும்மாளமிட்டுக் கூச்சலிட்டனர்.

சிறுவர்களது கூச்சலைக் கேட்ட ஆமை வெறுப்புற்றது. தனக்குள் "இக்குழந்தைகளுக்கு புத்தியில்லை; நல்ல பழக்கமும் இல்லை, இதை நான் அவர்களிடம் கூறுகிறேன்" என நினைத்து கொக்குகளின் புத்திமதியை மறந்து தன் வாயைத் திறந்தது. அதோ! பரிதாபம். வெகு உயரத்திலிருந்து கீழே தரையில் விழுந்தது. அடிபட்டு இறந்தது.

இது கண்ட கொக்குகள் தமது நண்பனுக்கு ஏற்பட்ட கதியை நினைத்து வருந்தின. தமது புத்திமதியை மறந்ததால் ஆமைக்கு இக்கதி ஏற்பட்டது என்று தீர்மானித்தன. அறிவில்லாதவர்களுக்குச் செயுயும் உதவி வீண் என்று எண்ணி ஏரிக்குத் திரும்பின.



# 7. சாமர்த்தியமுள்ள குடியானவன்.



வெகு காலத்திற்கு முன் நம் நாட்டின் வடக்கே ஓர் அரசன் இருந்தான். அவன் நாட்டை சரிவர ஆட்சி செய்யவில்லை. சுயநலமும் கொடுமையும் உள்ளவன். அதனால் மக்கள் அவ்வரசன்மேல் மிக்க வெறுப்புடன் இருந்தனர்.

ஒரு நாள் அவ்வரசன் தனது இரதத்தில் ஊர் சுற்றி வந்தான். வழியில் தரையில் விறகுச் சுமையுடன் சென்று கொண்டிருந்த ஓர் இளம் பெண்ணைக் கண்டான். அவள்மிக அழகாக இருந்தாள். அரசன் அவளை மணம் செய்து கொள்ள விரும்பினான்.

இரதத்தை நிறுத்தி அப்பெண்ணைப் பார்த்து, "நீ யார்? எங்கு வசிக்கிறாய்!" என்று கேட்டான். அவள் "நான் ஓர் ஏழைக்குடியானவனின் மகள். நாங்கள் அதோ, அக்கிராமத்தில் வசிக்கிறோம்" என்று பதில் கூறினாள்.

அரசன் அரண்மனையை அடைந்ததும் அக்குடியானவனை அழைத்துவர வேலையாட்களை அனுப்பினான். குடியானவன் வந்தவுடன் அவனிடம் “நான் உன்னுடைய மகளை மணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனது அபிப்பிராயம் என்ன?” என்று கேட்டான். அதற்கு குடியானவன் சிறிதும் தயங்காமல் “எனது மகள் ஓர் அறிவுள்ளவனைத்தான் மணக்க நான் விரும்புகிறேன். தாங்கள் அதற்கு தகுதி உள்ளவரா?” என்று கேட்டான்.

அது கேட்டு கோபங்கொண்ட அரசன், “அப்படியானால் என்னை அறிவில்லாதவன் என்றா கூறுகிறாய்?” என்று கேட்டார். அதற்கு குடியானவன், “தாங்கள் நான் கேட்கும் வினாக்களுக்குத் தகுந்த விடையளித்தால் என் மகளை மணக்கலாம்” என்று நிதானமாகக் கூறினான். அதற்கு அரசனும் சம்மதித்தான். உடனே குடியானவன் அரசனிடம் “உலகில் எது அதிக சக்தி வாய்ந்தது?” என்று கேட்டான். அதற்கு அரசன் “சூரியன்தான் உலகில் அதிக சக்தி உள்ளது” என்று பதில் கூறினான். உடனே குடியானவன், “தாங்கள் கூறுவது தவறு. நாம் சூரியனிடம் போய் கேட்போம்” என்றான்.

இருவரும் சூரியனிடம் சென்று இதைப்பற்றிக் கேட்டனர். அதற்குச் சூரியன், “நான் சக்தி வாய்ந்தவன், ஆனால் மேகம் என்னைக் காட்டிலும் அதிக வலுவுள்ளது. அது அடிக்கடி என்னை மறைத்து என் சக்தியைக் குறைக்கிறது” என்றது.

உடனே அரசனும் குடியானவனும் மேகத்திடம் சென்று விசாரித்தனர். அதற்கு மேகம் “நான் சூரியனைக் காட்டிலும் சக்தியுள்ளவன்தான். ஆனால் காற்று என்னை நாலாபக்கமும் தள்ளி அடிக்கிறது” என்றது. இது கேட்ட குடியானவன் அரசனிடம், “நாம் காற்றிடம் சென்று கேட்போமா?” என்று கேட்டான்.




அரசனும் சம்மதித்தான். இருவரும் காற்றிடம் சென்று வினாவினர். காற்று உடனே "நான் எனது சக்தியால் மேகத்தைத் தான் தள்ள முடியும், மலையைத் தள்ள முடியவில்லையே? அதனால் மலை என்னைவிட அதிக பலம் வாய்ந்தது" என்றது.

அங்கிருந்து இருவரும் மலையிருக்குமிடம் சென்று கேட்டனர். அதற்கு மலை, "நான் காற்றைக் காட்டிலும் பலமுள்ளவன்தான் ஆனால் என்னைக் காட்டிலும் எலிதான் அதிக சக்தி வாய்ந்தது. அது என்மேல் சுலபமாய் துளைத்து துவாரமிடுகிறது" என்றது.

இதுகேட்ட இருவரும் ஆச்சரியமுற்று எலியிடம் சென்று விசாரித்தனர். அதற்கு எலி, மலையைத் துளைக்கக் கூடிய சக்தி பெற்றிருந்தாலும் என்னைக் குடியானவர்கள் சுலபமாய் பிடித்துக் கொல்கிறார்கள். அதனால் அவர்களைக் கண்டு நான் பயப்படுகிறேன். என்னைவிட அவர்கள் அதிக சக்தியுடையவர்கள் என்றது.